271

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# வேதமணிமாலை.

அஹ்கா முஷ் ஷாபிஇய்யா.

இஃது

கீழக்கரை முஹம்மது இபுருஹீம் நெய்னு

அவர்களின் புத்திரர்

**H. M. முகியிதீன் அப்துல் காதிறு ஆலீம்**

**ஸாஹிபு அவர்களால்**

இயற்றப்பெற்றது.

கீழக்கரை "**TAS**" அச்சகத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

ஹிஜ்ரி 1381 ஜமாதுல் ஆகிர்

**1961.**

AT MADURAI
3 APR 1962
MADRAS RECORD OFFICE
MADRAS
271
267
QT: 417
N61
114118

Q7:417
N61

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

இஃது

கீழக்கரை முகம்மது இபுருஹீம் நெய்னா அவர்களின் குமாரர் **முகிய்யதீன் அப்துல் காதிர் ஆலிம் சாஹிபு** அவர்களால், இயற்றப்பெற்றது.

கீழக்கரை மாதிஹுர்ரஸூல் ஸிபுதைனி அல்ஆலிமுல் அரூஸ் செய்யது முகம்மது அல்லாமா அவர்களின் பவுத்திரரும் ஹாஜியுல்ஹரமைனிஷ்ஷரீ பைனி யுமாகிய மௌலவி **தை. சா. அகம்மது அப்துல்காதிர் ஆலிம் சாஹிபு** அவர்களாலும்,

கீழக்கரை டவுன் கத்தீபும் மதுரசத்துல் ஜலாலியயாவின் போதகாசிரியருமான **கா. செ. செய்யது முகம்மது ஆலிம் சாஹிபு** அவர்களாலும்,

சீறு புதூஹுஷ்ஷாம் முதலிய புராணங்களின் வியாக்யான பிரசங்கியுமான **கா. செ. பு. ஷம்ஸுத்தீன்** புலவரவர்களாலும், பரிசோதித்து பிழை திருத்தப்பட்டது.

## சாற்றுக் கவிகள்.

கீழக்கரை ஹைராத்துல் ஜாலிய்யாவின் போதகாசிரியர் கத்தீபு

**கா. செ. செய்யது முகம்மது ஆலிம் சாஹிபு**

அவர்களருளிய

### விருத்தம்.

கழனிவழம் சூழ் கீழக்கரை வாழும்பிமான னவனி யோர்கள்

MADRAS RECORD OFFICE MADRAS
TAMIL NADU ARCHIVES LIBRARY No.
114118

பழுதகல வேதமணிமாலையெனும் நூலொன்றை
பகர்ந்தான் சீர்கள்
அழகு நெறிமுறை வழுவா தாதரிக்க
பண்புள்ளோர்கள்
நழினமொழியுற முகிய்யதீன் அப்துல்காதிறுக்கருள்.

---

சீரு. புதூஹுஷ்ஷாம்முதலிய புராணங்களின் வியாக்யான பிரசங்கி, **கா. செ. பு. ஷம்ஸுத்தீன்** புலவரவர்களியற்றிய,

### வெண்பா.

போதமணிமாலை போதிப்ப வந்துதித்த
வேதமணிமாலை தனை மேதினியி—லோதிவைத்தார்
மூதறிஞ ரானவெம் முகிய்யத்தீன் அப்துல்
காதிறுக் காரீடிருப்பார் காண்.

---

கீழக்கரை முகிய்யதீன் அப்துல் காதர் அவர்களின் குமாரர் **முகம்மது அப்துல்ஹையி** அவர்களாலியற்றிய

### வெண்பா.

வேதமதை யோதிவைப்பவர் முகிய்யதீன் அப்துல்
காதிறுரைத்தார் வணங்க காவலனைபேதமற
வேதமணிமாலையெனும் வெற்றி தரும் நன்னெறியை
போதனையினலதுவேபோது மெவரும் பொருந்த,

---

முற்காலத்திய பாடசாலைகளில் மார்க்க ஒழுங்குகளாகிய வைதீக ஞானமும், உலக நடத்தைகளுக்குரிய லௌகீக கல்விகளும், ஒழுங்காய் போதித்து வரப்பட்டது. அநேகருக்குத் தக்க ஷுரூத் முதலியவைகள் மனனமாயும் இருந்தன. தற்காலக் கல்வியில் வைதீகம் முற்றும் ஒழிந்து லௌகீகத்திலும் அநேகமாய் ஞானமில்லாத கல்விகளையே போதித்து வீணுய்க் காலத்தைக் கடத்தப்படுகின்றன. மேலும் பாடசாலை மாணவர்களில் சிலரை மார்க்க விஷயமான பர்ழு ஸர்த்துகளைக் குறித்து கேட்டதற்கு தங்களுக்குப் படித்துக் கொடுக்கவில்லையென்றும், அதைப்பற்றி யாதொன்றும் தெரியாதெனவும் சொல்கிருர்கள். இஸ்லாம் மார்க்கத்துக்குரிய நூல்கள் உதிர் மொழியாயும் பாடல்களாயும் அநேகமிருந்தாலும் அவைகள் வெகு விரிவாயும் கடும் பதங்களாயுமிருப்பதால் அதுகளை மனனம் செய்து விளங்கியறிந்துகொள்ள சக்தியற்று, சடைந்து பொடுபோக்காய் விட்டு விடுகிருர்கள். ஆனதினுல் கால இயற்கைக்குத் தக்கவாறு சுலபமாய் விளங்கியறிந்து கொள்ளக்கூடிய விதமாய் இஸ்லாத்தின் ஐந்து பர்ழுகளிலுமுள்ள முக்கியமான பர்ழு ஷர்த்துக்களின் விபரங்களைப் பாட்டாகக் கோர்த்து அச்சிட்டுத்தர வேண்டுமென கீழக்கரை குதூமுல் இஸ்லாம் சங்கத்தின் உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் பல பிக்ஹு கிதாபுகளில் நின்றும் தெரிந்தெடுத்து பாடசாலை மாணவர்களுக்குப் போதிக்கக்கூடியதாயும் சொற்ப படிப்புள்ளவர்களும்

லெகுவில் தெரிந்துகொள்ளக் கூடியதாயுமுள்ள வேதமணிமாலை என்னும் இந்நூலை அல்லாகுத்த ஆலாவின் உதவியால் தவாபை ஆதரவு வைத்து அடக்கமாக செந்தமிழில் கோர்வைசெய்யலானேன். எனதன்புள்ள முஸ்லிம் சகோதரர்கள் இதை வாங்கி மூலையில் போட்டு விட்டு இருந்திடாமல் இதிலுள்ள ஹுக்முகளை மனனம் செய்து அமல் நடத்தி வர சர்வ தயாபரனுன அல்லாகுத்தஆலா நம்மனை வோருக்கும் யீடுமீக்ஷிக்குரிய நேர்வழியை காட்டி அவனின் கிருபா கடாக்ஷத்தை தந்தருள்வானுகவும் ஆமீன்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# வேதமணிமாலை.

1. எல்லாப்புகழும் இறையோனுக்காயிருக்கும்
வல்லான் நபிதமக்கும் வருசையுள்ள
ஆல்களுக்கும்
2. தோழ ரடங்கலுக்கும் தொகுத்து சலவாத்து
ஸலாம்
வாழ முஸ்லீங்கள் வணக்கமுடன் என்னுளும்
3. வேதமணிமாலையென விளம்பியிதின் நாமம்
பேதமறவே முகிய்யதீன் அப்துல் காதிர்
சொல்லும்
4. போதனையி லேதேனும் பிழைகளிருந்தாலும்
மேதினியிலே யறிந்தோர் மாற்றித்திருத்திடவும்

## தீனின் பயான்

5. தீனென்றசொல் தனக்கு தகுந்தபொருள்
மூன்ருகும்
வானமைத்த வல்லோனுக்கு வழிப்படுவதும்
வழக்கம்
6. ஈனமறவே நடந்தால் இகபரனின்
கூலியுண்டாம்
ஆன பர்ழுகளை யன்பாகவே கேளும்
7. ஈமானிஸ்லாமும் இலங்குங் தௌஹீதும்
நேமமஃரி பத்தும் நாலுந் தீனின் பர்ழாம்

## ஈமானின் பயான்

8. ஈமான் பர்ழாறு ஹிருதயத் திருத்திடவும்
கோமானுடன் மலக்கும் குத்பும் றசூல் நபியும்
9. மறுமைநாள் கற்பனையும் மஹ்ஷர்
நன்மை தின்மைகளும்
பொறுமையுள்ள நாயகனின் புறத்தில் நின்று
முள்ளதுவாம்

10. எட்டு ஷுருத்தீமானில் இறையை யுவக்கிறதும்
இட்ட கட்டளை நடத்தும் இமையோ
ரடங்கலையும்
11. ஹுப்பாய் நபிகளையும் குஷியாயுவக்கிறதும்
தப்பாய் நடப்பவர்மேல் தான்கோபமாகிறதும்
12. அல்லா விலக்கினதை யறிந்து விலகிறதும்
வல்லோனின் கட்டளைக்கி வழிப்பட்டு
எப்போதும்
13. நல்லோன் கிருபையினை நாமாசை வைக்கிறதும்
பொல்லா அதாபுதனை பயந்து நடப்பதுமாம்

## இஸ்லாத்தின் பயான்.

14. இஸ்லாத்திலைந்து பர்ழியம்பும் கலிமாவும்
பிஸலாய்த் தொழுகை நோம்பும்பேனும்
ஸக்காத்து ஹஜ்ஜும்

## கலிமாவின் பயான்.

15. நவிலும் கலிமாவில் நான்கு பர்ழுகளாம்
குவலையத்திலே யதனை கூறிடுகிறேன் கேளும்
16. ஆதியொருவனென்றும் அவன் வர்ணிப்பும்
செயலும்
ஜோதிநபி மொழிந்த சொல்லை
யுண்மைகொள்வதுமாம்
17. சாற்றுங் கலிமாவின் ஷுறுத்துகளும் நாலாகும்
மாற்றமில்லாமலதை மனதிலிருத்திடவும்
18. வெல்லுங் கலிமாவை வாயால் விளக்கிறதும்
அல்லும் பகலுமதை யகத்திலுண்மை
கொள்கிறதும்
19. எல்லா வுருப்புகளும் இணங்கியமல் செய்கிறதும்
பொல்லாங் கணுகாமல் பர்ழையிறுப்பதுமாம்

## முழுக்கின் பயான்

20. முழுக்கை விதியாக்கும் மங்கையர்க்கு
ஆறுசெயல்

விளக்குமதிலாடவர்க்கும் வனிதயர்க்கும்
மூன்ருகும்
21. ஊருமணி விழுதல் ஒண்டித் தபமறைதல்
பாரிலுயிர் பிறிந்து பரலோகம் சேர்வதுமாம்
22. ஹைழு நிபாசதுவும் குழந்தை ஜனித்துவிடில்
பைழுபெறமுழுகிறது பாங்குடனே பர்ழாகும்
23. துடக்காளிக்கைந்து செயல்
தொழுகைதவாபு தொடல்
படிக்கிறதும் குர்ஆனே பள்ளியிற்றரிக்கிறதும்
24. ஹைழான பெண்களுக்கு கையிணக்கம்
சேர்க்கைசெய்தல்
பைழாகமுன் நோன்பும் பகர்ந்த எட்டும்
செய்ய ஹறும்
25. முழுக்கின்பர்ழிரெண்டு முறையுடனே
நிய்யத்தெண்ணல்
களக்கமற மெய்முழுதும் கழுகிறதும் பர்ழாகும்
26. மூன்று ஷர்த்துகளாம் முழுக்கில்
துய்யநீர்தேடல்
பூண்ட இஸ்லாமும் புனல் விலக்கல்
மேனியெல்லாம்
27. சொல்லுமதன் ஸுன்னத்துகள் சிறந்த
பிஸ்மிசொல்லல்
வெல்லுமுன் கரங்களுகி விரும்பி
ஒழுச்செய்கிறதும்
28. அடராமலே நஜீசையகற்றி வலமுற்படுத்தல்
தொடராயுருப்புகளைத் தேய்க்கிறது மிவ்வாறும்

## தயம்மமின் பயான்

29. தண்ணீரிழந்தவர்க்கும் தசையில்
பிணியுள்ளவர்க்கும்
மண்ணால் தயம்மம்செய்ய
மூன்று ஷர்த்துகளாம்

30. நேரம்வந்தபின் தயம்மம்
நெறியாகசெய்கிறதும்
ஈரம்புழங்குதற்கு யேலாமலாகிறதும்
31. தூசியுடனே கலர்ந்ததுய்மையுள்ள
மண்ணதுமாம்
வாசமுடனே பர்ழை வளுத்துகிறேன் ஆருகும்
32. தயம்மம்தனைநாடி துய்யமண்ணெடுக்கிறதும்
ஐயமறவே நிய்யத்தும் அழகாய் முகம்மஸுகும்
33. கையுமிருமொளியும் கடத்திமண்ணில்
ரெண்டுதரம்
பையவடிக்கிறதும் பகரும் தறுத்தீபுமாம்
34. ஆறுஸுன்னத்துகளாம் அருளுகின்ற
நிய்யத்துவும்
வாறும்புழுதியைகைவதனிலெளிதாக்கிறதும்
35. வழுத்தும்பிஸ்மில்லாவும்
வலதைமுற்படுத்திகரம்
இழுத்துவிரல்கோர்த்து இணைப்பதும்
துயர்ச்சியுமாம்
36. ஒழுவைமுறிக்கிறதும் வக்தில் தண்ணீர்
காங்கிறதும்
தழுவும் குபுர் நிலையும் தயம்மம் தனையளிக்கும்
37. உற்றதயம்மமினுல் உகந்த பர்ளிலொன்றும்
பற்றிஸுன்னத்தெத்தனையும் பரிவாகவே
தொழலாம்

## ஒழுவின் பயான்.

38. சீராயொழுவிலுள்ளஷறுத்தாரிஸ்லாமும்
பூராயம் புத்தியுடன் பருழை யறிகிறதும்
39. ஒழுவை பருழெனவே உவந்து கல்பிலெண்ற
தும்
தெளிவாகமேனிகளில் தண்ணீர்ஒலிக்குமிடம்
40. பேதகங்களும் தடையும் பேணியகற்றுறதும்
துய்தாக்கும் தண்ணீரை தேடி எடுப்பதுமாம்

41. ஒழுவின் பர்ழாறை உறைக்குகிறேன் கேளு
முதல்
தொழுகை தனக்காகதுய்தாக்கும்நிய்யத்துவும்

42. நெற்றி முடியருகும் நாடிக்குளிவரையில்
சுற்றியிருசோணேவரை சூள்முகங்கழுகிறதும்

43. கரத்திலிருமொளியுள் கையைகழுகிடுதல்
சிரத்தில் சிலதுதன்னே சீர்மஸுகுசெய்கிறதும்

44. காலிருகறண்டைவரை கழுகி முன்பின்
இல்லாமல்
கோலமதையொழுங்காய்கொண்டுவருவதுமாம்

45. ஒழுவில் பத்து ஸுன்னத்துகள் உவந்து
பிஸ்மி சொல்லல்
கழுகிறதும் முன்கை ரெண்டும் கருதி
மிஸ்வாக்கிடலும்

46. உற்றவாய் கொப்பிளித்தல் ஊர்நாசி நீர்
செலுத்தல்
சுற்றமுடன் நர்லிலொன்று சிரமும்
செவிமஸ்கும்

47. பாடும் உறுப்பை முக்கர்ல் பற்றி
வலமுற்படுத்தல்
தர்டியிருகால் கைவிரல் தப்பாமல் கோதுரதும்

48. முன்னேக்கியேகி புலாமுடிவில் துஆ ஓதல்
இன்னுஅன்ஸல்நாகு இறுதியினி லோதலுமாம்

49. பேசுறதும் கிபுலாவை புரங்காட்டலும்
முகத்தில்
வீசுறதும் தண்ணீரை வேறுதவி தேடுறதும்

50. மெய்யை மூன்றுக்கதிகம் மீட்டலிட
முப்படுத்தல்
கைய்யை யுதறுவதும் கனத்தஜலம் சிந்துறதும்

51. களிம்பூறும் பாத்திரத்தில் கதிரோனில்
காய்ந்தபுனல்
விளம்பும் ஒழுவிலெட்டும் விலக்கான
மக்றூஹாம்

52. முன்பின் துவாரம்விட்டும் மனியன்றி யேதும்
வரல்
தன் அகங்கை யாலபத்தை தொடுகிறதும்
பெண்களையும்

53. கோதையர்க்கும் ஆடவரை கொள்ளமுறை
யுண்டானால்
போதை ம்யக்கமதால் புத்தி தடுமாறிடினும்

54. சாய்ந்து உறங்கிடிலும் சமைந்த
இருப்பில்லாமல்
ஐந்தும் ஒழுவுதன்னை யகற்றி கெடுத்திடுமாம்

55. தொழுகிறதும் குர்ஆனை தொடுவதும்
தவாபு செய்தல்
ஒழுவில்லார்க் கிம்மூன்றும் விலக்குடன்
ஹறுமாகும்

## தொழுகைக்குமுன் வேண்டிய ஷர்த்துகள்.

56. இஸ்லாமுடன் புத்தியும் இடம் உடை யுடம்பு
சுத்தம்
உஸ்லாமுழுக்கதையும் ஒழுவையிறுக்கிறதும்

57. தப்லீகுடன் தனக்குத் தொழுகை
விதியென்றெண்ணலும்
கிபுலாவை முன்னோக்கல் குறித்த வக்தினையும்

58. தெரிந்து பர்ழுகளை துயர்ந்த ஸுன்னத்தை
விட்டும்
அறிந்திடுவதும் ஒளரத்தை அழகாய்
மறைக்கிறதும்

59. ஓங்குந் தொழுகைக்குள்ள ஒழுங்கு
முறைகளெல்லாம்
பாங்காய் அறிந்திடுதல் பத்தும் ஷருத்துகளாம்.

## தொழுகையின் பயான்

60. வரிசை தொழுகையினில் வழுத்தும்
பர்ழைக்கேளும்
பிரிசமுடன் நிய்யத்தும் பெரியோன் தக்பீரும்
61. நேராக நிர்க்கிறதும் நெரியாயல்ஹம்
தோதுறதும்
கூராக வேறுகூடும் குனிந்து தறிக்கிறதும்
62. சிறப்பான இஃதிதாலும் சேர்ந்து தறிக்கிறதும்
பொருப்பான முன்ஸுஜூதும் பொருந்தி
தறிக்கிறதும்
63. இடையிலிருக்கிறதும் இணங்குமதன் தறிப்பும்
சடையாமல் பின்ஸுஜூதும் சாற்றுமதன்
தறிப்பும்
64. ஆகிரிறுக்கிறதும் அத்தஹிய்யாத் தோதுறதும்
பாகிர் நபிக்கதனில் பகரும் சலவாத்தும்
65. ஒருசலாம் சொல்கிறதும் ஒழுங்காக
செய்கிறதும்
அறிவீர் பர்ழெனவே அறுளிய
பத்தொன்பதையும்
66. நிய்யத்திலே ஷறுத்து நிகழ்த்துகின்ற ஆருகும்
துய்யோனையே நாடிதொழுகிறே,
னென்றெண்ணலும்
67 நேரம் குறிக்கிறதும் நவிலும் ழுஹர்போலேதும்
கூரிடுவதும் பர்ழைகழாவதா வென்பதையும்
68. சந்தேகம்நீக்கி கல்பில் சேகரித்து
நிய்யத்தையும்
பிந்தாமலே அக்பர் பொருந்த முடிப்பதுமாம்

69. பத்து ஷறுத்துகளாம் பகருமுன் தக்பீரில்
சுத்தமுடன் அல்லாஹு அக்பரென்று
சொல்கிறதும்

70. ஹர்பும் தஷ்தீதும் ஹதுபாக ஓதாமல்
உர்பில் செவிகேள்க்க அறபாலுரைக்கிறதும்

71. மிக்கஅலிபும் ஹேபே மிகுதமாய் நீட்டாமல்
பக்குவமாய் றேய்க்கு சுக்கூன் பகர்ந்து
லெப்ழையெல்லாம்

72. முன்பின்மொழியாமல் முறைதுயறுமூண்டாகல்
தென்பாகவே நிலையில் தீர்முடிப்பதுமாம்

73. நிலையில் ஷறுத்துஒன்று நேராக நிற்கலுமாம்
தலையான பாத்திஹாவில் தகுந்த
ஷறுத்தெட்டாகும்

74. வழுத்தாமல் முன்னும்பின்னும் வருசைதப்பி
ஆயத்தொன்றும்
எழுத்தை விட்டிடாமல் ஷத்து இஃருபை
பேணுறதும்

75. துலக்கிச் செவிகேள்க்க துயர்ந்து அறபாலும்
விலக்காமலே நிலையில் விரும்பி முடிப்பதுமாம்

76. ரெண்டு ஷறுத்துகளாம் றுக்கூவிலிரு
உள்ளங்கையும்
ஒண்டமுளந்தாளில் ஊணி குனிகிறதும்

77. நாடிறுக்கூகுதன்னை நலமாக யேகலுமாம்
ஓடும் உறுப்பொடுங்கல் அதன் தறிப்பினில்
ஷறுத்தாம்

78. மூன்றிஃதிதால் ஷறுத்து முதுகை
செவ்வையாக்கிறதும்
ஊன்றி மனதிலதை உயர்ந்துநிலை சேருவதும்

79. நீட்டாமலே நிலையை நெறியாக நிற்கலுமாம்
தேட்டமுடனத்தரிப்பில் திரேகமொடுங்கல்
ஷறுத்தாம்

80. செய்யுமுன் ஸுஜூததிலே ஷறுத்தாறு
நெற்றியையும்
கையு முழந்தாளிரண்டு கால் விரல்களில்
அகமும்
81. பட்டிட தரையில் தலைபிடர்கனம்
பொறுக்கிறதும்
பிட்டியையுயர்த்துறதும் பணித்துத்
தலைதாழ்துறதும்
82. திரையன்றியே நெற்றியை திறந்து
ஸுஜூதேகலுமாம்
முறையுடனதன் தறிப்பில் மெய் ஒடுங்கிடல்
ஷறுத்தாம்
83. பிந்தின ஸ்ஜூததிலும் பேணு
முன்னையைப்போலாம்
இந்தரெண்டுக்குமிடையிருப்பில்
மூன்று ஷறுத்தாம்
84. உருப்பும் முதுகந்தண்டும் ஒழுங்காக
வைக்கிறதும்
இருப்புக்கன்றி தலையையுயர்த்தாதிருக்கிறதும்
85. நீளாது சந்துமட்டாயிருப்பையே நாடலுமாம்
மீளுமதன் தரிப்பில் மெய்யொடுங்குதல்
ஷறுத்தாம்
86. ஈற்றினத்தஹிய்யாத்து இருப்பில்
ஷறுத்திரெண்டாம்
ஏற்றமுது கெல்ம்பெல்லாம் இயல்பாக
வைக்கிறதும்
87. வேறெதையும் நாடாமல் உயர்ந்து
இருப்பதுமாம்
கூறும் அத்தஹிய்யாதில் குறித்த
ஷறுத்தேழாகும்
88. ஷத்தும் ஹருபுகளும் சருகாமலோதுறதும்
சத்தம் செவிகேள்க்க சாற்றும் துடறுடனும்

89. பேணிஇஃறுபுதன்னை பிசகாமலேலபுழும்
ஈனமுடன் முன்னும்பின்னும்
இசைக்காமலோதுறதும்

90. இருப்பில் முடிக்கிறதும் இணங்கும்
சலவாத்தினுக்கும்
குறிப்பாகவே இது போல் கூறும் ஷறுத்தேழாம்

91. சொல்லுமுன் சலாமதிலே சூழ்ந்த
ஷறுத்தைந்தாகும்
வல்லஹறுநபிலொன்றும் வழுகவிட்டிடாமல்
ஷத்தும்

92. சாற்றுந்துடருக செவிகேள்க்க ஓதுறதும்
மாற்றமில்லாமலதை முடிப்பதிருப்பிலுமாம்

93. தறுத்தீபில் ஓர் ஷறுத்து தக்க பருழையெல்லாம்
திருத்தி முன்பின் இல்லாமல் துயர்த்திக்
கொண்டு வாரதுமாம்

94. தொழுகை அப் ஆழுதுவர்க்கம்
அத்தஹிய்யாத்தும்
தழுகும் அதன்யிருப்பும்
தறாதுநபிக்கோதுறதும்

95. பிந்தினதில் ஆல்களுக்கு பகரும் சலவாத்தும்
சொந்தறமழானில் ஸோலாவித்ரதிலும்

96. எந்த சுபுகிலையும் எழும்பி குனூத்தோதுறதும்
நந்துமதன் நிலையும் நபிக்கு சலவாத்தும்

97. அப்ஆழு சுன்னத்துகளறிவீர்களிவ்வேளும்
சப்யிலொன்றை விட்டிடிலும்
சந்தேகமாகிடிலும்

98. மறந்து றக்கஆத்து மூன்றோ நாலென்று மனம்
இருந்தால் சலாமுக்கு முன் இருஸுஜூது
செய்திடவும்

99. அவ்வல் தக்பீரதிலும் அரியறுக்கூஅதிலும்
தவ்விறுக்கூஜவிட்டு தலைநிமிர்த்தும்
வேளையிலும்

100. முந்தும் அத்தஹிய்யாத்து முடிந்து
நிலைக்கேகயிலும்
அந்தமுடன் கையுயர்த்தல் அலங்கார
ஸுன்னத்துவாம்

101. வஜ்ஜஹ்து ஓதுறதும் ஒவ்வொன்றிலும்
அஊதும்
நிச்சயமாய் ஆமீனை நெறியாய் யுரைக்கிறதும்

102. விளங்க குறுஆனேதும் விரும்பி
பிஸ்மில்லாவும்
வழங்குமுன் நிலைரெண்டிலும்
வரிசையுடனோதுறதும்

103. ஏழுவிரல் மட்டிருகால் இடைபோட்டு
நிர்க்கிறதும்
தோள்நேர் செவிவரை கை தூக்கி
உயர்த்துறதும்

104. வயத்திலிட கைவிரல்கள் விரித்து வலமேலும்
வைத்து மணிக்கட்டிடதை வலதால்
பிடிக்கிறதும்

105. நெற்றிபடும் தலத்தை நோக்கியே நிற்கிறதும்
யெற்றிறுக்கூகு தன்னிலிரு காலை
பார்க்கிறதும்

106. சென்று முழந்தாளில் சிரங்குனிந்து
மூன்றுதரம்
விண்டு தஸ்பீகை விரைந்து
றுக்கூஉவிட்டும்

107. உரைத்துஸமி அல்லாஹு உயர்ந்திஃதி
தாலில் முற்றும்
கரைத்து றப்பனுவெனவே ஹக்கை
புகளுறதும்

108. மீளும் இடங்களிலே மொளியும் தக்பீறுகளும்
ஏழுருப்பைக்கொண்டு ஸுஜூதியல்பாக
செய்கிறதும்

11411

109. முந்த முளந்தாளிருகை மூக்கு நெற்றி
வைக்கிறதும்
தொந்தி வயர் துடைகை தோகை விலா
சேர்க்கிறதும்

110. வயத்தை துடையை விட்டும் விலாவை
யிருகையை விட்டும்
புயத்துக்கு நேர்விரலை பறத்தி கையை
ஊன்றுறதும்

111. தரையின் ஸுஜூததிலும் தனித்தறுக்கூ
கதிலும்
பறையும் தஸ்பீஹுகளும் பரிவான
இப்திராஷும்

112. இடையிருப்பிலே இருந்து யென் பிழையை
நீ பொரென்றும்
துடையிலிருகையை வைத்துத் துய்யோனை
கேள்க்கிறதும்

113. ரெண்டுதஷஹ்ஹுதிலும் இல்லல்லா
வெண்ணுமிடம்
கண்டு கலிமாவிரலைகாட்டியுயர்த்துறதும்

114. தவர்றுக் கிறுக்கிறதும் தரிப்பும் இஸ்தி
ராகத்துவும்
தவராமலே வலமுன் துவக்கி சலாம்
சொல்கிறதும்

115. ஈற்றின் துஆவிரண்டாம் சலாமை
இயம்புறதும்
ஏற்ற தொழுகையினிலெங்கள் நபி
ஸுன்னத்துவாம்

116. இளிவானமக்றூஹு இருபத்தியேழாகும்
தொழுகையில் கண்மூடுறதும் தொங்க
முந்தியை விடலும்

117. முகந்திருப்பலும் தலைதோள்
மூடாதிருக்கிறதும்
மிகப்பனிதலும்றுக்கூகில்மலம்ஜலமடக்கிறதும்

118. வானத்தைப் பார்க்கிறதும் வலமுன்
உமிழ்கிறதும்
தீன் குடிப்பை கார்க்கவைத்து தின்னுமலே
தொழலும்
119. வாயில் கைவைக்கிரதும் வதனம்
துடைக்கிறதும்
நாயிருப்பிருக்கிறதும் நஜீஸருகு குப்பையிலும்
120. கட்டும் துறைகோவிலிலும் கபுர் அறுக்கும்
தானத்திலும்
விட்டு ஸுன்னத்தை விரைந்தும் விரல்
சைக்கினை செய்வதும்
121. உடுப்பை ஒதுக்குறதும் ஒருகாலில்
நிர்க்கிறதும்
இடுப்பில் கைவைக்கிறதும் இருளில்
தொழுகிறதும்
122. இமாமிழந்த சிறு இருப்பை மஃமூங்கள்
செய்கிறதும்
இமாம் தனக்கு மட்டும் துஆ ஒருமையாய்க்
கேள்ப்பதுமாம்
123. அளிக்கும் தொழுகையினை ஐந்துடனே
பத்து செயல்
பழக்கமது பேசல் பர்ழு ஷறுத்திழக்கல்
124. துடக்கு நஜீஸுண்டாகல் துடரான
மூன்று செயல்
வெடிக்க சிறித்திடுதல் வெளியிலெளரத்து
தெரிதல்
125. நிய்யத்து பேதலித்தல் நினைவுதடுமாறல்
துய்யஒழு முறிதல் துலங்குங் கிபுலாமாறல்
126. குடிப்பூணையுள்கொள்ளுதல்
குபுறைவருத்திடுதல்
எடுப்பான இச்செயலால் ஏகும் தொழுகை
தன்னுல்

## ஜும்ஆ நிறைவேற தேவையான ஷறுத்துகள்

127. ஜும்ஆ நிறைவேர சூழும் ஷறுத்து பத்தும்
ஜம்அன்றி கூடாது சரீர சுவாத்தியமும்

128. நாற்பதுபேர் ஆடவரும் நாட்டாமகன் முஸ்லிம்
ஊர்பதிபராயம்புத்தி ஓதல் செவி கேள்ப்பவனும்

129. சுத்தமாய் பாத்திஹாவை சொல்லத் தெரிந்தவனும்
சித்தமுடன் ஜும்ஆவை சேர்ந்து நடத்திடலாம்

## ஜும்ஆவின் பயான்

130. பாடுகின்ற ஜும்ஆவில் பகரும் ஷறுத்தாருகும்
நாடுமந்த ஊரவர்கள் நாற்பதுபேர் கூடிடலும்

131. ஓதலும் தொழுகையதும் ஊரெல்லைக் குள்ளிடலும்
போதனை வணக்கம் ரெண்டும் பொருந்தி முகர்க்குள்ளிடலும்

132. இரண்டு குத்பாவும் இதன்பின் தொழுகிறதும்
திரண்டு முதல் தக்பீர் தவறுமல் சேர்வதுமாம்

## கொத்பாவின் பயான்

133. ஏழு ஷறுத்துக்களாம் இரண்டு குத்பாவதிலும்
கேழ்ப்பிவிப்பதும் பர்ழை குறித்த நாற்பது பேர்க்கும்

134. அறபா லுறைக்கிறதும் ஔரத்தை மறைக்கிறதும்

இருப்பு மிறண்டுக்கிடை யெழும்பிநின்று
ஓதுறதும்
135. துடக்கு ரெண்டையும் நீக்கி துப்புரவு
செய்கிறதும்
தொடுக்கும் குத்பாவை துயர்ச்சியுட
. ஞேதலுமாம்
136. அல்லாவை ஹம்துகொண்டும் அகுமதற்கு
சலவாத்தும்
வல்லான் தக்வாவை வஸியத்துச்
செய்கிறதும்
137. விண்டுகுறுன் ஆயத்தொன்றும் விரும்பி
துஆ கேள்க்கிறதும்
ரெண்டு குத்பாவிலெட்டு றுக்ஞுகுமுன்
மூன்றும்
138. குத்பாவின் ஸுன்னத்துக்கள் குறிப்பான
ஏழாகும்
கத்தீபு சலாம் சொல்கிறதும் கௌம்களை
முன்ஞேக்கிறதும்
139. மொழிகள் விளங்கிடவே மிம்பரில்
நின்ரேதுறதும்
களிகூர்ந்த ஸாஊணல் கருதி துஆ
கேள்க்கிறதும்
140. முஸ்லிம் அரசருக்கும் முறையாய்
ஸஹாபிகள்க்கும்
பிஸலா யிகாமத்துக்குள்போய் மிஃரா
பெற்றலுமாம்
141. திரும்புறதும் சைக்கிளையும் படிமே
லடிக்கிறதும்
வெரும்புகளை மன்னருக்கு விளக்கலும்
விரைந்திடலும்
142. இருக்கமுன்னே மிம்பரிலும் எல்லாப்
படிகளிலும்
வெறுக்கத்தரித்து துஆ ஓதல் மக்றூ கேளும்.

## இமாம் ஜமாஅத்தின் பயான்

143. ஏழு ஷறுத்துக்களாம் இமாமை துயறுவதில்
மீளும்செயல் குனிதல் முற்றும் அறிந்திடலும்
144. குரித்து நிய்யத்து வைத்தல் குதிகாலின்
பின் நிர்க்கல்
பெருத்த பர்ழிரெண்டை பிந்தாம
லெத்தீடலும்
145. ஒரு தலத்தில் நின்றிடுதல் ஒற்றுமையைப்
பற்றிடுதல்
இரு பர்ழை முந்தாமல் இணங்கி யமல்
செய்வதுமாம்
146. பிக்ஹுடைய ஆலிமையும் பேணும்
வரயியையும்
தக்கியான காரியையும் தகுதியுள்ள
ஹாபிழையும்
147. வங்கிஷமுடையோறையும் வயது
முதியோர்களையும்
தங்களுக்கு முன்நிறுத்தி துயர்ந்து
தொழுதிடலாம்
148. துயர்ந்து தொழுகிறது தகாது பத்துப்
பேர்களையும்
உயர்ந்து றக்ஆத்ததிகம் ஒன்று
யிணைப்போனையும்
149. தொழுகை பாத்தி லானோனையும்
தொடர்ந்து கொண்டிருப்போனையும்
பழுதாக பாத்திஹாவை பகருகின்ற
பாஸிதையும்
150. எழுத்தைப் பிரட்டியையும் இத்கோமை
எத்தலத்தும்
வழுத்துவோனையும் உடையில் வெளியில்
நஜீஸுள்ளோனையும்

151. பேதகனையும் மஃனு பிஷகிட
உரைப்போனையும்
கோதையைத் துயறுவதும் கொற்றவர்க்குக்
கூடாதாம்

152. ஹத்நா இல்லாதோனையும் ஹதாவாய்
மொழிவோனையும்
பித்நாவஸ்வாஸி பாஸிக்கை துயருவதும்
154, சுத்த மக்றூஹு சொல்லுகின்ற இன்னுங்கும்
சுத்தியுடன் வணங்கி சுகம்
பெறுவீரெல்லோரும்

## மையத்தின் பயான்.

154. செத்திறந்த பேர்களுக்கு செய்யும்
முறை நான்கு
மற்றவர்கள்மேல் பர்ழாம் மையத்தை
குளிப்பாட்டல்

155. துரிதாய் கபனுடுத்தல் தொழுவித்
தடக்கம் செய்தல்
கருதுமிவை பர்ழு கிபாயாவென்றூர் பிக்ஹில்

156. மையத்துத் தொழுகையினில் மருவும்
பர்ழேழுமுதல்
நிய்யத்து செய்கிறதும் நிலையும் தக்பீர் நாங்கு

157. கட்டுறதும் பாத்திஹாவை கெட்டியுடன்
முந்தினதில்
விட்டிடாமல் ஓதுறதும் விரைந்து
சலவாத்து ரெண்டில்

158. மரித்தவர்க்கு மூன்றில் துஆ மண்டாடி
கேட்டிடுதல்
குறித்த நாலும் தீர்ந்து சலாம் குணமாய்
கொடுப்பதுமாம்

159. அஞ்சு ஸுன்னத்துக்களாம் அடங்கலிலும்
கையுயர்த்தல்
வஞ்ச னிபுலீஸு தன்னை விரட்டி
அஊதோதுறதும்
160. சங்கை சலவாத்தை ஸலாமுடனே
சேர்த்தோதல்
பங்கமற மையத்துக்கு பிழைபொருக்கக்
கேள்க்கிறதும்
161. தனக்காக நாலில் துஆ தவரும லோதிடுதல்
இணக்கமுடன் மையத்துக்கு யிறையோன்
தொழுகையிலாம்.

## ஸக்காத்தின் பயான்

162. நாணயத்திலே சதக்கா நாற்பதிலே
ஒன்ருகும்
தானியத்தில் பத்தி லொன்றும் தகுந்த
நிசாபின் வீதம்
163. ஒட்டகமும் மாடாடும் ஒவ்வோர்
வருடத்திலும்
எட்டுக் கூட்டத்தார்க்கு எடுத்து
ஸக்காத் தீந்திடவும்
164. ஸக்காத்திறுபடுவதற்கு ஷறுத்திரெண்டு
நிய்யத்துவும்
பகாது பலபேர்க்கும் பாதீஷ்த்தர்க்கீவதுமாம்
165. பக்கீறு மிஸ்க்கீங்கள் பறைசாற்றும்
ஆமிலுக்கும்
வக்காரத்தினை நாடி வந்திஸ்லா
மானவர்க்கும்

166. அடுமை சீட்டை யொழிக்க ஆவலுள்ள
அப்தினுக்கும்
மிடுமையுடன் கடனைமீட்ட வழியில்லார்க்கும்

167. பிரதேச மானவர்க்கும் பீசபீல் காரருக்கும்
பர்ழாம் ஸக்காத்தெனவே பகர்ந்து
கொடுத்திடவும்

168. நலமென்று நாடி நல்கும் ஸக்காத்திலெதும்
பலனைக் கொடுக்காது பனிரெண்டு
பேர்களுக்கும்

169. காபிறுக்கும் அடுமை ஹாஷிமீ முத்தலிபீ
தீபர மாயவர்க ளுரிமையிட்ட பேர்களுக்கும்

170. அறுபது ஆண்டு வரை
அன்னமுடையவர்க்கும்
கிருபையுள்ள மக்களுக்கும் கொண்ட
கணவனுக்கும்

171. படிகொடுக்கும் பேர்களுக்கும் பெற்றதாய்
தந்தையர்க்கும்
கடனை யெடுப்பதற்கும் கொடுக்கிறது
கூடாதாம்.

## நோம்பின் பயான்

172. இஸ்லாம் புலூகு புத்தியுண்டாகல்
தத்துவமும்
நஸல் சபரிழந்திடுதல் நோம்பின்
ஷறுத்தாறும்

173. நோம்பின் பர்ழிரெண்டு நிய்யத்து
வைக்கிறதும்
வீம்பாய் முறிக்காமல் விரும்பியதை
பேணலுமாம்

174. எல்லா ஸஹரிலையும் எழும்பி
நிய்யத்து செய்தலும்
செல்லானபின் பகலோன் சுறுக்கா
திரந்திடலும்

175. தீன்குடிப்பின் இச்சையையும் திய்ய
பேச்சை விடலும்
பூணிப்புடன் வணங்கி புறுக்கானை
யோதுறதும்

176. குளிப்பதும் பஜ்ருக்குமுன் கொடைமிகுதம்
செய்கிறதும்
பளிப்பற இஃதிகாபும் பத்தும்
ஸுன்னத்துக்களாம்

177. நிய்யத்திளக்கிறதும் நினைவு தடுமாறுவதும்
தையலை புணருவதும் தான் குபுரிலாகிறதும்

178. ஊணும்குடிப்பேதும்ஒங்கரிப்புண்டாக்கிறதும்
தோணுகின்ற வஸ்துக்களை துவாரங்களி
லேற்றுறதும்

179. பெண்கள் ஹைழாகிறதும் பிள்ளை
நிபாஸதுவும்
பங்கமுற நோம்புதன்னை பத்தும்
பஸாதாக்கும்

## ஹஜ்ஜின் பயான்

180. தக்கமுதல் வாகனமும் திரேக பலமும்
புலூகும்
ஒக்கதுணைஹுர் றிஸ்லாம் உண்டேல்
ஹஜ்ஜு விதியாம்

181. மக்காவில் செய்யும் ஹஜ்ஜில் மருவும்
பர்ழாருகும்
மிக்க இஹ்றும் அறபா மேவித் தரிக்கிறதும்

182. தவாபுல் இபாழாவும் தொங்கோட்டம்
ஓடுறதும்
சவாபாய் முடிகளைதல் செய்யும் தறுத்தீபுமாம்

183. தொகுத்த ஹஜ்ஜின் வாஜிபுகள்
துலங்குமிந்த ஐந்தாகும்
வகுத்த மீக்காத்துகளில் வந்திஹ்ரும்
கட்டுறதும்

184. பெருநாளில் முஸ்தலிபா போயி
றவ்வு தங்கிறதும்
மறுநாள் தஷ்ரீக்குகளில் மிநாவிலிரா
தங்கிறதும்

185. விரைந்து கல்லெறிகிறதும் விதாவின்
தவாபதுவும்
பரைந்தமக்கீ ஹைழுடைய பெண்களன்றி
எல்லோரும்

186. முழுகிறதும் இஹ்ருமை மனதிலெண்ணியே
தயம்மம்
முழுகாதவர் செய்வதும் மகிழ்ந்து மக்கா
புகுதுறதும்

187. எட்டி அறபா மலையில் இரவிலிருக்கிறதும்
கட்டும் இஹ்ருமுக்குமுன் கனத்த மணம்
பூசுறதும்

188. தநாவான தல்பியாவும் தவாபுல் குதூமதுவும்
மிநாவில் அறபா இரவில் மஷ் அறிலும்
தங்கிறதும்

189. விர்துசலவாத்துகளும் விதாவின் திக்றுகளும்
பர்தான நாயகன்தான் பகர்ந்த ஹஜ்ஜின்
ஸுன்னத்துவாம்

## உம்ருவின் பயான்.

190. இஹ்ரும் தவாபுஸகீஇறக்கு முடியும் ஒழுங்கும்
நிஹரும் உமுருவில் நிகழ்த்தும் ஐந்தும்
பர்ழாம்

## இஹ்ருமினால் செய்ய ஆகாத கருமங்கள்.

191. தைத்த உடையணிதல் தையல் முகம்
மூடுறதும்
வைத்த முடிகளைதல் ஆண்கள் தலை
மூடுறதும்
192. எண்ணை மணம் பூசுறதும் இணைந்த நகம்
அறுப்பும்
பெண்ணை நிக்காஹு செய்தல் பர்ஜில் வத்தி
செய்கிறதும்
193. வேட்டை மிருகம் தன்னை விரைந்தடுத்துக்
கொல்கிறதும்
தேட்டமுடன் ஆணும் பெண்ணும் திறை
யன்றியே தொடலும்
194. பொருந்தாதிஹ்ராமில் பத்தும் ஹராமாகும்
தெரிந்தகன்று கொள்வீர்கள் தீனுடையோ
ரெல்லோரும்

## தவாபின் பயான்.

195. நடத்தும் தவாபுதன்னை நிய்யத்து
செய்கிறதும்
தொடுத்து ஹஜரில் நின்றும் துவக்கி
நடக்கிறதும்

196. துப்பறவு செய்கிறதும் துடக்கு நஜீஸை
விட்டும்
தொப்புழும் ஔரத்தையும் துணியால்
மறைக்கிறதும்
197. இடதில் கஃபாவை வைத்து ஏழு தரம்
சுற்றுறதும்
திடனுக இவ்வாறும் தவாபின் ஷறுத்துகளாம்
198. முத்தி ஹஜரை தொட்டு முகத்தையதில்
வைக்கிறதும்
சுத்தும் தவாபிலெல்லாம் சொல்லும் றுக்னை
தொடலும்
199. முன் மூன்றிலும் றமலுமுறையாக செய்கிறதும்
பண்பாயிவைகளெல்லாம் பேசுமதின்
ஸுன்னத்துவாம்

## சஃயின் பயான்.

200. ஷறுத்துத்தவாபுக்குப்பின் சபாமர்வா
ரெண்டினுக்கும்
பொருத்தமுடன் நடந்து போயிதிரும்புறதும்
201. தொடுத்து சபாவில் சஃயிதுயர்ச்சியா
யேழு தரம்
முடித்துமர்வாவில் முறையுடன் விடுவதுமாம்

## ஹல்க்கின் பயான்.

202. சிரசினில் மூன்றுக்குமேல் ஷிஃரை
சிரைக்கிறதும்
வரிசையுடனெழுங்கும் வல்லோனின்
கட்டளையாம்

203. வீணுயிஹ்றுமில் விலக்கினதை செய்தாலும்
பேணுமல் வாஜிபுகள் பிசகிடிலும் தம்
விதியாம்

## ஹாத்தமா.

204. ஆதி ரஹ்மானே ஆகிரத்திலெந்தனக்கும்
மாதா பிதா மனைவி மக்கள் முஸ்லிம்களுக்கும்
205. வேதமதையோதி விரும்பியமல்
செய்வோருக்கும்
வேதனைகள் வராமல் வரிசையுள்ள
பொன்னுலகம்
206. புகுத்தி பயஹாம்பர்பவனிகண்டு
யெல்லோரும்
சுகித்திருக்கவேசுவனில் சொந்தலிகா
தந்தருள்வாய்.

**ஆமீன்.**

07:47
N61
114118
TAS
KKI

"TAS" அச்சகத்தில் அச்சிடப்பட்டது,
கீழக்கரை—61. (இராமநாதபுரம் ஜில்லா.)

புதிய எழுத்துக்கள் !

சிறந்த வேலைகள் !!

குறைந்த சார்ஜ் !!!

கண் கவரும் "பிளாஸ்டிக்" கல்யாணப் பத்திரிகைகளுக்கும், இன்னும் எல்லாவித மான அச்சக வேலைகளுக்கும், ஸ்கூ லுக்கு வேண்டிய சகல விதமான நோட் புத்தகங்களுக்கும் சிறந்த இடம்

"TAS" அச்சகம்

கீழக்கரை.

இராமநாதபுரம் ஜில்லா

(தமிழ் நாடு.)